DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 23/2020 |
| Deposition of Witness for | : | P.W.2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | அன்பழகன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.04.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பில் 2வது சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. வருமானச் சான்று அசல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. எனது ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. உணவு பாதுகாப்பு லைசென்ஸ் கணிணி நகல் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் சக்திமெஸ் என்ற நிறுவனத்தை எந்த ஆண்டிலிருந்து நடத்திவருகிறேன் என்றால் 2009ஆம் ஆண்டிலிருந்து நடத்திவருகிறேன். சுந்தரம் என்பவர் எந்த வருடத்திலிருந்து என்னிடம் வேலை பார்த்து வருகிறார் என்றால் 2015 முதல் 2018

வரை வேலை பார்த்து வந்தார். மேற்படி சுந்தரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சுந்தரின் தந்தை பெயர் தெரியுமா என்றால். அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் காரைக்குடி, புதுவயலைச் சேர்ந்தவர் ஆவார். நான் சுந்தர் என்பவருக்கு மாதம் ரூ.20 ஆயிரம் கொடுத்ததற்கான வரவு செலவு லெட்சர் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. நான் தாக்கல் செய்துள்ள வருமானச் சான்றிதழில் மாதம், தேதி மற்றும் குறிபப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். கடந்த 2009ம் தொடங்கப்பட்ட சக்திமெஸ் க்கு லைசென்ஸ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சுந்தர் என்பவர் என்னிடம் வேலை பார்க்கவில்லை என்றும், நான் அதிக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் GST கட்டுவதற்கான கணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.